
SEC SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA




# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்திலான ஓர் சுருக்கமான கண்ணோட்டம்

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டமானது 21 செப்டம்பர் 2021 இல் சபாநாயகரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சட்டமாக வந்துள்ளது. இது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இ.பி.ப.ஆ. சட்டத்தினை நீக்கி மாற்றீடு செய்கின்றது.

கணிசமானளவு காலத்தில் திட்டமிடப்பட்ட சட்டமானது நன்கு சிந்திக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குவதுடன் இது உலகம் பூராவுமுள்ள பிணையங்கள் சந்தைகளின் நவீன அபிவிருத்திகளை கருத்திலெடுத்துள்ளதுடன் சர்வதேச பிணையங்கள் ஆணைக்குழுக்கள் ஒழுங்கமைப்பினால் (ச.பி.ஆ.ஒ.) எடுத்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நியமங்களை கடைப்பிடிக்கின்றது. இது சந்தை அபிவிருத்திக்கு வசதியளிக்கும் அதேவேளை வலுவான முறைமைப்படுத்தலையும் இயலுமையாக்குவதுடன் இலங்கையின் பிணையங்கள் சந்தையின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளையும் நிவர்த்திசெய்யும்.



## சட்டத்தினை வரையும் செயல்முறை

ஏனைய நியாயாதிக்கங்களின் சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வு மற்றும் இடைவெளிப் பகுப்பாய்வின் விளைவாக, சட்டத்தினை வரையும் செயல்முறையானது 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த முன்னெடுப்பிற்கு உலக வங்கி மற்றும் இலங்கையின் நிபுணர்களிடமிருந்து தொழில்நுட்ப உறுதுணை பெறப்பட்டது. முதலாம் வரைவானது 2013 இல் நிறைவு செய்யப்பட்டதுடன் இது அப்போதைய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. அது தொடர்ந்து செயலாற்றப்படாததன் விளைவாக, பின்னர் வந்த ஆணைக்குழுவினால் அந்த வரைவிற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றதன் பின்னர் இந்த சட்டமூலமானது 2018 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. 2018/2019 காலப்பகுதியில் முன்னைய ஆணைக்குழுவினால் அந்த சட்டமூலத்திற்கு மேலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. சட்டத்தினை முடிவுறுத்தும்போது, முன்னைய வரைவுகளில் காணப்பட்ட மையமான ஏற்பாடுகள் தக்கவைக்கப்பட்டவேளை, தற்போதைய ஆணைக்குழுவானது சட்டத்தின் பிரயோகம் மற்றும் நடைமுறைப்படுத்தலில் எவ்விதமான சிரமமும் இல்லாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக பொருள் தெளிவின்மை மற்றும் வரையறுக்க இயலாத நிலைமை என்பவற்றை நீக்குவதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொண்டது. நீண்ட வரையும் செயல்முறையில் அனைத்து பங்காளிகள் மற்றும் பொதுமக்களுடன் பல்வேறு கலந்தாலோசனைகள் இடம்பெற்றதுடன் இந்த சட்டத்தினை உருவாக்குவதில் அவர்களது பங்களிப்பானது அளப்பரிய உறுதுணையளித்தது என்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

## சட்டத்தின் கட்டமைப்பு

சட்டமானது ஏழு பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் அவை மேலும் பல்வேறு அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. முக்கியமான சிறப்பம்சம் என்னவெனில், ஒவ்வொரு பகுதியின் ஆரம்பத்திலும், அந்த பகுதியின் 'குறிக்கோள் மற்றும் நோக்கம்' விரிவாக விவரிக்கப்பட்டுள்ளதாகும். இது அத்தகைய பகுதியில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளினூடாக எதனை அடைவதற்கு முயற்சிக்கின்றது என்று ஓர் அறிகுறியினை வழங்குகின்றது.

பகுதி I பின்வரும் ஆரம்ப விடயங்களை கையாளுகின்றது. சட்டத்தின் பிரயோகம் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் நோக்கம், ஆணைக்குழுவினை நிறுவுதல் மற்றும் அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றுடன் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணியாட்டொகுதி தொடர்பான விடயங்கள் ஆகியனவாகும். 'சந்தைகள் மற்றும் சந்தை நிறுவனங்கள்' என்று தலைப்பிடப்பட்ட பகுதி II ஆனது பரிமாற்றகங்கள், தீர்வக இல்லங்கள் மற்றும் ஓர் மத்திய வைப்பகம் என்பவற்றின் நிறுவுதலுக்கு வசதியளிக்கின்றது. 'பிணையங்களது வழங்கல்' என்று தலைப்பிடப்பட்ட பகுதி III ஆனது பிணையங்களது பொது கொடைமுனைவுகள், சந்தை இடையீட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களது சொத்துக்களை பாதுகாத்தல் என்பவற்றை கையாளுகின்றது.

பகுதி ஐஏ ஆனது 'பட்டியலிடப்படா பிணையங்களிலான வர்த்தகத்தினை' கையாளுகின்றது. 'சந்தை துர்நடத்தை' எனத் தலைப்பிடப்பட்ட பகுதி V ஆனது தடைசெய்யப்பட்ட நடத்தை மற்றும் உள்ளுறைபவர் வர்த்தகம் என்பவற்றை கையாளுகின்றது. பகுதி ஏஐ ஆனது ஆணைக்குழுவின் நிதிகள் தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்குவதுடன் பகுதி ஏஐஐ ஆனது சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல், தண்டனைகள் மற்றும் வலியுறுத்தல் பொறிமுறைகள் போன்ற பொதுவான விடயங்களை கையாளுகின்றது.

## சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

சட்டமானது நாட்டின் பிணையங்கள் சந்தையினை முறைமைப்படுத்துவதில் வினைத்திறன், முன்கணிப்புத்தன்மை மற்றும் ஒத்திசைவு என்பவற்றை உறுதிப்படுத்தக்கூடிய பல அனுகூலமான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. மேலும், இது பின்வருவனவற்றினை இயலுமையாக்குகின்றது: அதிநவீன உட்கட்டமைப்பின் பயன்பாடு மற்றும் வழங்குநர்களின் வெவ்வேறு நிதி திரட்டல் தேவைப்பாடுகள் மற்றும் அதனுடன் பல்வேறு கருவிகளை அறிமுகப்படுத்தக்கூடிய ஆற்றலானது முதலீட்டாளர்களுக்கு அவர்களது இடர்நேர்கை விளைவு தனிப்பண்புகளுக்கேற்ப பரவலான விருப்பத்தெரிவினை வழங்குகின்றது.

## சந்தை மற்றும் சந்தை நிறுவனங்கள்

சந்தைகள் மற்றும் சந்தை நிறுவனங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பகுதி II ஆனது புதிய சட்டத்தின் ஓர் முக்கிய பகுதி என்பதுடன் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முக்கிய நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகளை முறையாக செயற்படுத்தும் என்பதுடன் இதன் காரணமாக பிணையங்கள் சந்தையின் வினைத்திறனான மற்றும் திறமைமிக்க செயற்பாட்டிற்கு துணைபுரிவதுடன் முறைசார் இடர்நேர்கைகளைக் குறைப்பதற்கும் துணைபுரியும்.

இந்த ஏற்பாடுகள் ஓர் பரிமாற்றகம், ஓர் தீர்வக இல்லம் மற்றும் ஓர் மத்திய வைப்பகம் ஆகியவற்றின் உரிமைகள் மற்றும் கடமைகள், ஓர் உரிமத்தினை பெறவேண்டுமாயின் பூர்த்திசெய்யவேண்டிய தேவைப்பாடுகள், ஓர் உரிமம் எப்போது நீக்கப்படலாம் மற்றும் ஓர் உரிமம் நீக்கப்பட்டால் பரிகாரத்திற்கான உரிமை, இந்த சந்தை நிறுவனங்களது விதிகளின் விளைவு, பணிப்பாளர்களின் நியமனம், ஓர் கணக்காய்வாளரின் கடமைகள் போன்றவற்றை குறிப்பிடுகின்றன.



ஓர் முக்கிய சிறப்பம்சம் என்னவெனில் ஓர் உரிமமளிக்கப்பட்ட பரிமாற்றகமானது அதன் சொந்த பரிமாற்றகத்தில் அதன் பிணையங்களை பட்டியலிடலாம். ஓர் தீர்வக இல்லம் ஓர் மத்திய எதிர்தரத்தவராக செயற்படுவதற்கான அங்கீகாரம் மற்றும் ம.எ.த. வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் ஓர் தீர்வக அங்கத்தவர் சூழ்நிலைகளை கையாள்வதற்காக தவறுதல் விதிகள் மற்றும் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கான விரிவான ஏற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தவறுதல் நடவடிக்கைகள் வர்த்தகங்களின் இறுதிநிலையினை கொண்டுவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### சந்தை இடையீட்டாளர்கள்

சட்டமானது 'சந்தை இடையீட்டாளர்களை' மீள்வரையறை செய்துள்ளதை குறிப்பிடுவது பொருத்தமானதாகும் மற்றும் ஒரு சில வகையான நபர்களை சேர்த்துள்ளது. அவர்கள், 'கூட்டாண்மை நிதியியல் ஆலோசகர்', 'சந்தை உருவாக்குபவர்', 'மூலாதாரப் பிணையங்கள் தரகர்' மற்றும் 'மூலாதாரப் பிணையங்கள் வர்த்தகர்' ஆகும். சந்தை உருவாக்குபவர்களின் அறிமுகம் முக்கியமானதாகும் ஏனெனில் இவர்கள் கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இடையே தொடர்ச்சியான மற்றும் செயற்திறனான பிணையங்களது பரிமாற்றத்தினை உறுதிசெய்வார்கள்.

சந்தை நிறுவனங்களைப் பொறுத்தளவில், அவர்களது கடமைகள், ஓர் உரிமம் பெறுவதற்கு மற்றும் புதுப்பிப்பதற்கு நிறைவேற்றவேண்டிய தேவைப்பாடுகள், ஓர் உரிமம் நிராகரிக்கப்படுதல், இடைநிறுத்தப்படுதல் அல்லது நீக்கப்படுவதற்கான காரணங்கள், சந்தை இடையீட்டாளர்களினால் பிணையங்களில் வர்த்தகம், ஓர் கணக்காய்வாளரின் கடமை போன்றன மிகவும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

சந்தை செயலாற்றுவதில் சந்தை இடையீட்டாளர்கள் ஓர் முக்கிய பங்கினை வகிக்கின்றார்கள். சந்தையின் முன்னணியில் அவர்கள் செயற்படுவதால் மற்றும் இதன் நிமித்தம் முதலீட்டாளர்களுடன் நேரடி தொடர்பினை கொண்டுள்ளதனால் அவர்களது நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துதல் அவசியமானதாகும். இதனை அடைவது நோக்கி மற்றும் அவர்கள் அவர்களது செயற்பாடுகளை மிகவும் செயற்திறனுடன் நடாத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக, 'வாடிக்கையாளர்களது சொத்துக்களைப் பாதுகாத்தல்' தலைப்பின் கீழ் சில தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. அவை சந்தை இடையீட்டாளர்கள் பிணையங்களில் அவர்கள் கொண்டுள்ள சில அக்கறைகளை வெளிப்படுத்துதல் வேண்டும், சில உள்வாரி செயல்முறைகள் மற்றும் செயலாக்கங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் விதிகளின் மூலம் ஆணைக்குழுவினால் குறிப்பிடப்பட்டுள்ள வணிக நடத்தைகளுடன் அமைவுறுதல் என்பனவாகும். இவை அவர்களது சொந்த இடர்நேர்கை மற்றும் வெளிப்பாட்டினை குறைக்கும் நோக்குடையது என்பதுடன் மற்றும் இணக்கப்பாட்டினை கண்காணிப்பதற்கும் மற்றும் இவை அவர்களுக்கு மேலதிக முயற்சி அல்லது செலவினத்தை விளைவிக்கக்கூடிய புதிய கடப்பாடுகளோ அல்லது நடவடிக்கைகளோ அல்ல. அத்தகைய தேவைப்பாடுகள் தற்போதும் விதிகள் மற்றும் ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் அறிமுகப்படுத்தப்படும் நியமங்கள் வடிவில் காணப்படுகின்றன. முன்னைய சட்டத்திற்கு எதிர்மாறாக, இச்சட்டமானது சந்தை இடையீட்டாளர்கள் தொடர்பான இந்த குறிப்பிட்ட தேவைப்பாடுகளை சட்டத்தின் பொருளிலேயே ஒருங்கிணைத்துள்ளது.

சந்தை இடையீட்டாளர்களுக்கும் மேலாக, ஆணைக்குழுவானது விதிகளின் மூலம், ஓர் சந்தை இடையீட்டாளருக்காக மற்றும் அவரின் சார்பில் வாடிக்கையாளர்களுடன் வர்த்தகம் செய்பவர்களுக்கு பதிவீடொன்றினை வேண்டுகின்றது. காப்பீட்டுக் கணிப்பாளர்கள், காப்பாளர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் மதிப்பீடு செய்பவர்கள் போன்ற 'துணைச்சேவை வழங்குநர்களையும் அங்கீகரிப்பதுடன் அவர்களில் ஆணைக்குழுவானது எதிர்காலத்தில் மேற்பார்வையினை மேற்கொண்டு பொதுமக்களின் நம்பகத்தன்மையினை பலப்படுத்துகின்றது.

### பிணையங்களது வழங்கல் மற்றும் சிறந்த கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளைப் பராமரித்தல்

பகுதி III 'பிணையங்களது வழங்கல்' உடன் கையாளுகின்றது மற்றும் ஏனையவற்றுக்கிடையில் இந்த பகுதியின் நோக்கமானது பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகளினால் நிதியியல் தகவல்கள் நேரகாலத்துடன் வெளிப்படுத்துதல் மற்றும் சிறந்த கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளுடன் இணக்கப்பாடு காணுதல் என்பவற்றை உறுதிப்படுத்துவதாகும்.



பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் நிதிகளுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக, பட்டியலிடப்படா கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் சில வகையான பொது வழங்கல்களுக்கு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளும் தேவையினை கொண்டுள்ள விதிகளை மேற்கொள்வதற்கு, அத்தகைய ஓர் நடவடிக்கை அவசியமென கருதும் பட்சத்தில், ஆணைக்குழுவிற்கு உரிமையுள்ளது. அத்தகைய தேவைப்பாடானது பின்வருவனவற்றை கருத்திற்கொண்டு அறிமுகப்படுத்தப்படலாம், 'பிணையங்களின் தொகை, பிணையங்களின் வகுப்பு, முதலீட்டாளர்களின் எண்ணிக்கை மற்றும் வகை, வழங்குநரின் தன்மை அல்லது பிணையங்கள் சந்தையின் தன்மை' போன்றவையாகும்.

பொதுமக்களுக்கு மேற்கொண்ட வெளிப்படுத்தல்களின் அடிப்படையில், ஏதேனும் தவறிழைத்தல் கண்டுபிடிக்கப்படுமாயின், ஆணைக்குழு அல்லது சந்தை நிறுவனங்கள் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களிடமிருந்து தகவல்களை கோருவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளன. 'முறையான விசாரணை அல்லது புலனாய்வின் பின்னர்' பட்டியலிடப்பட்ட கம்பனியானது சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு, ஒழுங்குவிதிகள், விதிகள் அல்லது பணிப்புரைகளை மீறியுள்ளன அல்லது இணக்கப்பாடு காண்பதற்கு தவறியுள்ளன என கண்டுபிடிக்கப்பட்டால், பொருத்தமானது என கருதும் ஏதேனும் வலியுறுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஆணைக்குழுவின் கூட்டாண்மை அலுவல்கள் பிரிவினால் பட்டியலிடல் விதிகளுடனான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக தற்போது மேற்கொள்ளப்படும் மேற்பார்வையானது இதன் ஒரு பகுதி என்பதுடன் புதிதாக ஒன்றுமில்லை என்பதனை இங்கு மீண்டும் அழுத்தமாகக் குறிப்பிடல் வேண்டும். என்ன நடந்துள்ளது என்றால் இந்த ஏற்பாடுகள் சிறந்த கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள் பின்பற்றப்படுவதனை உறுதிசெய்வதற்காக சட்டத்தில் விசேடமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஓர் சந்தை நிறுவனத்தின் ஓர் பணிப்பாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக அல்லது பிரதம முறைமைப்படுத்தல் அதிகாரியாக நியமனத்தினை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் ஓர் நபர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகும் மற்றும் அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படாததற்கான காரணமும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஓர் பட்டியலிடப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்கள் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோர் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விதிகளின் மூலம் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பரிமாற்றகத்தின் விதிகளில் குறிப்பிடப்பட்ட பொருத்தமான மற்றும் தகுதியான வரன்முறைகளுடன் இணக்கப்பாடு காணுதல் வேண்டும். மற்றுமோர் புதிய சிறப்பம்சம் என்னவெனில், பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்கள், சந்தை நிறுவனங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்கள் ஆகியோர் 'அவர்களது கடமைகளை நிறைவேற்றும் இயல்பான நடப்பில்' தெரிந்துகொள்ளும் சில முறைகேடுகளை அறிக்கையிடுவதற்கு கடமைப்பட்டுள்ளார்கள். அவை என்ன மற்றும் யாருக்கு அறிக்கையிடப்படல் வேண்டும் என்பன விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட நிறுவனங்களில் முறையான கூட்டாண்மை ஆளுகை காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவும், பிணையங்கள் சந்தையில் அவர்கள் வகிக்கும் முக்கியமான பங்கினை கருத்திற்கொண்டு முறைசார் இடர்நேர்கையினை குறைப்பதற்காகவும் இந்த தேவைப்பாடுகள் அறிமுகப்படுத்துப்பட்டுள்ளன. இந்த நடைமுறைகளில் அனேகமானவை தற்போது முடிவுறுத்தப்பட்டுக்கொண்டுள்ள கூட்டாண்மை ஆளுகை வரம்புறுகையின் ஓர் பகுதியாக வணிகச் சமூகத்தினால் கடைப்பிடிக்கப்படும் வேளையில், அவர்களது வணிகத்தினது சீரான நடத்தைக்கு இவற்றை தடைகளாகப் பொருள்கொள்ள இயலாது.

## பிரதான சந்தை தவறுகள்

பிரதான சந்தை தவறுகளை உள்ளடக்கியுள்ள சட்டத்தின் பகுதி V ஆனது நாட்டின் பிணையங்கள் சந்தையின் முறைமைப்படுத்தல் நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஓர் முன்னேற்றகரமான படியாகக் கருதப்படுகின்றது. இந்தப் பகுதியானது 'தடைசெய்யப்பட்ட நடத்தை' மற்றும் 'உள்ளுறைபவர் வர்த்தகம் எனும் இரண்டு அத்தியாயங்களை உள்ளடக்குகின்றது.

## தடைசெய்யப்பட்ட நடத்தை

தடைசெய்யப்பட்ட நடத்தையின் கீழ் ஐந்து வெவ்வேறு தவறுகள் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன, 'பொய்யான வர்த்தகம் மற்றும் சந்தை செயற்கை ஏற்ற இறக்கம்', 'பங்குச் சந்தை கையாடல்கள்', 'பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் கூற்றுக்களை மேற்கொள்ளுதல்', மோசடியான விதத்தில் நபர்களை பிணையங்களில் வர்த்தகம் செய்வதற்கு தூண்டுதல்' மற்றும் 'கையாடக்கூடிய மற்றும் ஏமாற்றக்கூடிய கருவிகளின் பயன்பாடு' என்பனவாகும்.

இந்த வகையான தவறுகளுக்கான மிகவும் முக்கியமான அறிமுகமாக, சந்தை கையாளுகை என பொதுவாக அறிந்துகொள்ளப்படும், இரண்டு தவறுகள் முறையே பிரிவு 130 மற்றும் 131 இல் காணப்படுகின்றது. பிரிவு 130 பிணையங்களின் சந்தை விலை அல்லது பருமனை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் ஓர் விளைவினை ஏற்படுத்தக்கூடிய பொய்யான அல்லது தவறாக இட்டுச்செல்லும் ஓர் கூற்றினை அல்லது தகவல்களை பரப்புவதலிருந்து ஒரு நபரை தடைசெய்கின்றது. பிரிவு 131 ஏதேனும் கூற்றினை மேற்கொள்ளுல் அல்லது பிரசுரித்தல் அல்லது தவறாக இட்டுச்செல்லும், பொய்யான அல்லது ஏமாற்றும் இயல்புடைய ஓர் எதிர்வுகூறலை மேற்கொள்வதன் மூலம் மற்றுமோர் நபரை வர்த்தகம் செய்வதற்கு தூண்டுதல் அல்லது தூண்டுவதற்கு முயற்சிப்பதிலிருந்து ஒரு நபர் தடைசெய்யப்பட்டுள்ளார்.

எத்தகைய நடத்தை தடைசெய்யப்பட்டுள்ளது என மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந்த பகுதியின் கீழ் ஓர் தவறு இடம்பெற்றுள்ளது என நிறுவுவதற்கு என்ன ஆக்கக்கூறுகள் காணப்படல்வேண்டும் என்பதனை புரிந்துகொள்வது சிரமமல்ல.

## உள்ளுறைபவர் வர்த்தகம்

உள்ளுறைபவர் வர்த்தகம் தொடர்பான அனைத்து தோற்றங்களும் மிகவும் துல்லியமாக விபரிக்கப்பட்டுள்ளன. எப்போது ஓர் நபர் ‘உள்ளுறைபவராக’ கருதப்படுகின்றார் என்பது தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது மற்றும் அத்தகைய நபர் எதனைச் செய்வதிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளார் என்பதும் உறுதிப்பாட்டுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, எது தகவலாகக் கருதப்படுகின்றது, எப்போது அத்தகைய தகவல் பொதுவாகக் கிடைக்கப்பெறும், பிணையங்களின் விலை அல்லது பெறுமதியில் கணிசமான தாக்கத்தினை கொண்டுள்ள தகவல் என்ன, எப்போது ஒரு நபர் மற்றுமொருவரை அடைந்துள்ளதாக கருதப்படுவார், எப்போது தகவல் கையுடைமையாக கருதப்படுகின்றது அத்துடன் விசேட விலக்களிப்புகள் மற்றும் உள்ளுறைபவர் வர்த்தகக் குற்றச்சாட்டு தொடர்பாக கிடைக்கக்கூடிய பாதுகாப்புகள் என்பன மிகவும் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த விரிவான ஏற்பாடுகள் ஏதேனும் உறுதியின்மை அல்லது சந்தேகம் என்பவற்றை அகற்றும் நோக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எவ்விதமான நடத்தை அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் எது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாக விளக்குகின்றது, ஏனெனில் சந்தையின் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் அவர்கள் செயற்படவேண்டிய வரம்புறுகை குறித்து முற்றாகவும் நன்றாகவும் அறிந்திருத்தல் அவசியமாகும். மேலும், ஏதேனும் அத்தகைய தவறினை இழைத்தல் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்பதுடன் இது அச்சுறுத்தலாக செயற்படும் நோக்கினைக் கொண்டதுடன் சந்தை பங்குபற்றுநர்களின் நடவடிக்கைகளை அடக்குவதற்கான அல்லது ஊக்கங் கெடுப்பதற்கான ஓர் உபாயமாக அல்ல.

முன்னைய சட்டத்தின் பிரகாரம் குற்றச்சாட்டுகள் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதைப் போலன்றி, இனிமேல் இந்த தவறுகள் மேல் நீதிமன்றத்தில் விளக்கமளிக்கப்படும் மற்றும் அத்தகைய தவறுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனும் ஒருவர் பத்து மில்லியன் ரூபாவிற்கும் குறையாத ஓர் தண்டப்பணத்திற்கு அல்லது பத்து வருடங்களை விஞ்சாத காலத்திற்கான சிறைத்தண்டனைக்கு அல்லது தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டிற்குமான ஓர் தண்டனைக்கு உட்பட்டதாகும்.

## ஆணைக்குழுவின் வழக்குத்தொடரக்கூடிய தீர்ப்புரிமை

### குற்றவியல் நடவடிக்கைகள்

ஆணைக்குழுவினால் புலனாய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டதன் விளைவாக, பகுதி V இன் கீழ் ஓர் தவறினை இழைத்துள்ளதனை நிறுவுவதற்கான போதிய சான்றுகள் காணப்பட்டால் குற்றவியல் நடவடிக்கைகளை தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற கருத்தினை ஆணைக்குழு கொண்டுள்ளது. குற்றவியல் நடவடிக்கைகள் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவேண்டியுள்ளதனால் குற்றச்சாட்டுக்கள் ஓர் ‘குற்றப்பகர்வு’ வடிவத்தில் தாக்கல் செய்யப்படுவதுடன் குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையில் குறிப்பிட்டுள்ளவாறு இது சட்டமா அதிபரினால் மாத்திரமே சமர்ப்பிக்கப்படலாம் (இலஞ்ச சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குடன்). ஆணைக்குழுவானது இவ்விடயத்தினை குற்றப்பகர்வினை தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பிவைத்து வழக்குத்தொடுப்பு சட்டமா அதிபரினால் நடாத்தப்படும். முன்னைய சட்டத்தின் கீழ் அனைத்து தவறுகள் தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படும்போதும், குற்றச்சாட்டுக்களின் தயாரிப்பு மற்றும் வழக்குத்தொடுப்பினை நடாத்துதல் சட்டமா அதிபரினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

பகுதி V இல் உள்ளடக்கப்பட்டுள்ள தவறுகள் தவிர்ந்த ஏனையவை நீதவான் நீதிமன்றத்தில் விளக்கமளிக்கப்படும்.

### குடியியல் நடவடிக்கைகள்

சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் புதிய சிறப்பம்சமாக குடியியல் நியாயாதிக்கத்தினை பயன்படுத்தி மேல் நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கைகளை தொடருவதற்கான தீர்ப்புரிமையானது ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதாகும். இந்த நீதிமன்றமானது பொதுவாக வர்த்தக மேல் நீதிமன்றம் எனக் குறிப்பிடப்படுவதுடன் இது சேதங்களை மீளப்பெறுவதற்கும் மற்றும் ஓர் குடியியல் தண்டனையினை விதிப்பதனை வேண்டுவதற்காகும்.

சட்டமானது விசேடமாக இந்த நியாயாதிக்கத்தினை வர்த்தக மேல் நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது. அத்தகைய நடவடிக்கைகள் பகுதி V இன் கீழ் ஓர் மீறுகையினை இழைத்த ஓர் நபருக்கெதிராக தொடரப்படலாம். அத்தகைய நடவடிக்கைகளை தொடருவதற்கான ஆணைக்குழுவின் தீர்மானமானது 'மீறலின் தன்மை மற்றும் விதம், சந்தையில் அது ஏற்படுத்தியுள்ள தாக்கம் மற்றும் யாரேனும் முதலீட்டாளருக்கு ஏற்படுத்தியுள்ள நட்டத்தின் அளவு' போன்றவற்றில் தங்கியுள்ளது. ஆணைக்குழுவினால் மீளப்பெறக்கூடிய தொகையானது உழைத்த பணவகை இலாபம் அல்லது தவிர்த்த நட்டத்தின் மொத்த தொகையின் மூன்று மடங்காகும் என்பதுடன் நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தண்டப்பணம் மீறுதலின் தீவிரம் அல்லது முக்கியத்துவத்தினைப் பொறுத்து பத்து மில்லியனுக்குக் குறையாதிருத்தல் மற்றும் நூறு மில்லியனுக்கும் அதிகமாயிருத்தல் ஆகாது. அவ்வாறு மீளப்பெறும் சேதங்கள் எவ்வாறு பகிரப்படல் வேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பகுதி V இன் கீழான மீறல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணவகையான இலாபம் அல்லது தவிர்க்கப்பட்ட நட்டம் ஆகியவற்றின் மொத்த தொகையின் மூன்று மடங்கிற்கு சமனான ஓர் தொகையினை செலுத்துமாறு, பொறுப்பினை ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றுக்கொள்ளாமல் யாரேனும் ஒரு நபருடன் ஓர் உடன்படிக்கையில் உள்நுழைவதற்கான தீர்ப்புரிமையும் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. பகுதி V இன் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள தவறுகளைத் தவிர்த்த ஏனையவை அத்தகைய தவறுக்கு விதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தண்டப்பணத்தின் அரைவாசியினை விஞ்சாத ஓர் தொகைக்கு ஒத்திணங்கப்படலாம்.

## நிர்வாக வலுவளிப்புகள்

அறிமுகப்படுத்தப்பட்ட மற்றுமோர் சிறப்பியல்பாக தவறிழைத்தவர்களில் 'நிர்வாக வலுவளிப்புகளை' ஆணைக்குழு விதிப்பதற்கான ஆற்றல் காணப்படுகின்றது. முன்னர், அனைத்து மீறல்களும் தவறுகளாகக் கருதப்பட்டபோதிலும் தண்டனைகளையோ அல்லது ஏனைய நிர்வாக வலுவளிப்புகளையோ விதிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு வெளிப்படையான அதிகாரம் காணப்படவில்லை.

எவ்வாறாயினும், 'மீறலின் தன்மை மற்றும் விதம், இணக்கப்பாடின்மை அல்லது மீறுகை மற்றும் அதன் தாக்கம்' என்பவற்றைப் பொறுத்து இந்த புதிய ஏற்பாடானது ஆணைக்குழுவுக்கு (பகுதி V இன் கீழான தவறுகள் தொடர்பானவை தவிர்த்து) கண்டனம், தண்டனை, மீட்டளிப்பு போன்ற பல்வேறு நிர்வாக வலுவளிப்புகளை விதிப்பதற்கும் வர்த்தகத்திலான ஓர் தற்காலிகத் தடை அல்லது தடைசெய்தல் போன்றவற்றிற்கான தீர்ப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.

## முதலீட்டாளர்களது சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்றத்திலிருந்து சில கட்டளைகளை வேண்டுவதற்கான உரிமை

ஏனைய சிறப்பம்சங்களுள் சிலவாக பின்வருவன காணப்படுகின்றன. வாடிக்கையாளரது சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், புலனாய்வுகளை அல்லது விசாரணைகளை நடாத்தும்போது 'முடக்குதல் கட்டளைகள்' என்றழைக்கப்படும் பணிப்புரைகளை வழங்குதல் (இவை ஏழு நாட்களுக்கு செல்லுபடியாகும் மற்றும் அதன்பின்னர் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்), மீறுதல் அல்லது நிகழப்போகின்ற மீறுதல் சூழ்நிலைகளில் ஓர் பிணையங்கள் கொடுக்கல் வாங்கலானது வெறிதானது என பிரகடனப்படுத்தல் போன்ற சில கட்டளைகளை வேண்டுதல் மற்றும் ஒரு நபரை ஏதேனும் பிணையங்களை விற்றுவிடுமாறு பணிப்புரைத்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கான ஆற்றல் ஆணைக்குழுவுக்கு உண்டு.

## மூலதனச் சந்தையின் அபிவிருத்தி

சந்தையின் அபிவிருத்தி நோக்கி பங்களிப்பினை வழங்கும் பல ஏற்பாடுகள் சட்டத்தில் உள்ளன. மிகவும் அவசியமான மத்திய எதிர்தரப்பினர் போன்ற அதிநவீன உட்கட்டமைப்பின் பயன்பாடானது அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இது மத்திய எதிர்தரப்பினர் இடர்நேர்கையினை பாரியளவில் குறைக்கும் மற்றும் புதிய கருவிகளது அறிமுகத்தினையும் இயலுமையாக்கும். புதிய சட்டமானது மூலாதாரப் பிணையங்களில் முதலீடு செய்வதற்கான தேவைகள் (உள்ளார்ந்த சொத்தின் தன்மையினை பொருட்படுத்தாமல் முன்பேரல்கள் மற்றும் தெரிவுரிமைகள் போன்றவை), பங்கு கடன்பெறுதல் மற்றும் கடன் வழங்கல், முறைமைப்படுத்தப்பட்ட குறை விற்பனை போன்றவற்றை விளக்குகின்றது. இது சந்தையின் திரவத்தன்மை மட்டங்களை மேம்படுத்துவதுடன் தற்போது காணப்படும் ஒருபக்க சாத்தியத்தினை அகற்றுவதுடன் மற்றும் ஓர் துடிப்பான சந்தையினை உருவாக்குவதற்கு துணைபுரியும். நீண்டகால முதலீட்டாளர்கள் இந்த வாய்ப்புக்களிலிருந்து நன்மையடைவார்கள்.

பட்டியலிடப்படா பிணையங்களின் வர்த்தகமானது ஓர் அங்கீகரிக்கப்பட்ட சந்தை செயலாற்றுபவரினால்



செயலாற்றப்படும் ஓர் மேடையினூடாக வசதியளிக்கப்படுவதுடன் ஓர் மேலதிய வர்த்தக மேடையினையும் வழங்கும். 'சந்தை உருவாக்குபவர்கள்' ஓர் சந்தை இடையீட்டாளராக செயற்படுவதற்கான ஆற்றலானது கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இடையே தொடர்ச்சியான மற்றும் வினைத்திறனான பிணையங்களது பரிமாற்றத்தினை உறுதிப்படுத்தும். இது சந்தைக்கு ஆழத்தினை வழங்குவதுடன் பரிமாற்றக வர்த்தக நிதியங்கள் போன்ற நிதியங்கள் உருவாக்கப்படுவதனையும் ஊக்குவிக்கும்.

மேலும், புதிய சட்டமானது உலகம் பூராவும் காணப்படும் புதிய அபிவிருத்திகளுக்கேற்ப ஓர் வரிசையான பிணையங்களை உள்ளடக்குவதற்காக 'பிணையங்கள்' என்ற பதம் மீள்வரையறை செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று நம்பிக்கை அலகுப் பொறுப்பாட்சிகளுக்கு அப்பால் சென்றுள்ள 'கூட்டு முதலீட்டு திட்டங்களுக்கான' ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. இந்தக் குடையின் கீழ் என்ன வரும் என்பதும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

தற்போது சந்தையில் கிடைக்கக்கூடிய கருவிகளின் வரம்பினை விரிவாக்கும் சமயம், 'ஏற்பளிக்கப்பட்ட முதலீட்டாளர்கள்' ஆக ஓர் வகுப்பு நபர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்கள். இது மதிநுட்பமற்ற முதலீட்டாளர்களை பாதுகாப்பது மட்டுமன்றி, உயர்ந்த இடர்நேர்கையினை பொறுப்பேற்கும் நிலையிலுள்ள முதலீட்டாளர்களினால் பயன்படுத்தக்கூடிய உயர் இடர்நேர்கையுடைய கருவிகள் சந்தைக்கு வழங்கப்படுவதற்கு வசதியளிக்கும்.

அம்பலப்படுத்துபவர்களை பாதுகாப்பதற்கான எற்பாடுகள் சந்தை துர்நடத்தைகளை கட்டுப்படுத்துவதற்கு வசதியளிக்கும் என்ற எதிர்பார்ப்புடன் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த பாதுகாப்பானது பொறுப்பற்ற கோரல்கள் மேற்கொள்வதன் மூலம் துர்ப்பிரயோகம் செய்யப்படாமலிருப்பதனை உறுதிப்படுத்துவது முக்கியம் என்பதுடன் அத்தகைய முறையானது கொண்டுவரக்கூடிய நலன்களை பொருட்படுத்தாமலிருக்க இயலாது.

### ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் தீர்ப்புரிமையிலான கட்டுப்பாடுகளும் இருப்புகளும்

ஓர் முறைமைப்படுத்துபவராக அதன் செயற்பாடுகளை மிகவும் அர்த்தமுள்ளதாகவும் மற்றும் வினைத்திறனான விதத்திலும் செயலாற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு பரவலான அதிகாரங்கள் மற்றும் தீர்ப்புரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அதிகாரம் மற்றும் தீர்ப்புரிமை வழங்கப்பட்டுள்ள ஏதேனும் ஏனைய பொது அதிகாரசபையினைப் போன்று ஆணைக்குழுவானது பாதிப்பின்மையினை அனுபவிக்க இயலாது என்பதனை கருத்தில் கொள்ளல் வேண்டும் என்பதுடன் அது அத்தகைய அதிகாரம் மற்றும் தீர்ப்புரிமை சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படுவதுடன் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இயற்கை நீதியின் விதிகளை பின்பற்றல் வேண்டும்.

ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தீர்ப்புரிமையானது பல கட்டுப்பாடுகள் மற்றும் இருப்புகளினால் கட்டுப்படுத்தப்படுவதுடன் அது ஆணைக்குழுவினது பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதுடன் மற்றும் எந்த சூழ்நிலையிலும் அதன் அதிகாரத்தினை விஞ்சலாகாது.

இவை ஏற்பாடுகள் வடிவில் ஓர் தரப்பினரது பக்கத்தினை ஆணைக்குழு கேட்கவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது அத்தகைய தரப்பிற்கு எதிராக ஓர் தீர்மானம் மேற்கொள்வதற்கு முன்னர், ஒரு தரப்பிற்கு முறையிடுவதற்கான உரிமையினை வழங்குதல், சில தீர்மானங்களுக்காக ஆணைக்குழு காரணங்களை வழங்கும் தேவைப்பாடு மற்றும் நீதிமன்றத்திலிருந்து கட்டளையினை ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு மற்றும் ஓர் கட்டளையினை மேற்கொள்வதற்கு முன்னர்



பாதிக்கப்பட்ட தரப்பினர் பக்கத்தினை கேட்பதற்கு நீதிமன்றம் அனுமதியளிக்க எதிர்பார்க்கப்படும்போது போன்றவையாகும்.

மேலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஓர் பேராணை விண்ணப்பம் மூலமாக ஆணைக்குழுவின் ஓர் தீர்மானத்தினை ஆட்சேபிப்பதற்காக பொதுச் சட்ட பரிகாரமானது சட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது, இதன் மூலம் ஓர் இடருறும் கட்சிக்காரருக்கான உரிமை சட்டரீதியாக வற்புறுத்தப்படுகின்றது.

### முடிவுரை

சட்டத்தின் முன்னேற்றகரமான ஏற்பாடுகள் அனைத்து சந்தை பங்குபற்றுநர்களும் அவர்களது நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நம்பகத்தன்மை மற்றும் அவசியமான சூழலை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இது மூலதனச் சந்தையின் இறுதி இலக்காகும். சந்தையின் முறைமைப்படுத்துபவராக ஆணைக்குழு எந்நேரமும் மிகை முறைமைப்படுத்தலின் ஆபத்து குறித்து அறிந்திருக்கும் என்பதுடன் ஓர் சரியான சமநிலையினை பேணுவதற்கு கடப்பாடுடையதாகும். அதே சமயம், அனைத்து சந்தை பங்குபற்றுநர்களும் சுய முறைமைப்படுத்தலை கடைப்பிடித்து சட்டத்தின் கட்டுப்பாட்டினுள் செயற்படுவார்களாயின், சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அனேகமான ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கான அவசியமானது காணப்படாது என்பதை வலியுறுத்தல் வேண்டும்.

Follow us on:

Telephone : +94 11 2143843
Fax : +94 11 2439149
Email : mail@sec.gov.lk

www.sec.gov.lk